Registered as a News Paper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    மாசி 01    (13-02-1992)    வியாழக்கிழமை    ஓசை: 360

## பௌத்த மதத்தினருக்கு 'சான்றிதழ்' திட்டம்

பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பௌத்தர்கள் என்று பதிவு செய்தல் வரவேற்கத்தக்க நல்ல ஆலோசனையாகும். அப்படிப் பதிவு செய்து 'சான்றிதழ்' வைத்திருப்பது ஒருவருக்கு நன்மை பயக்கக் கூடியது என்று இரத்தினபுரி பெல்மதுல ராஜமகா விகாரையில் சமாதி நிலையில் வடிவமைக்கப்பட்ட புத்தர் சிலையை திரைநீக்கம் செய்து வைத்துப் பேசும் போது ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறினார். பௌத்தர் என்று தம்மைப் (6ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் நாட்டு மத்தியஸ்துவத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் போர்நிறுத்தத்தைக் கொண்டுவந்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சுவிற்சலாந்து அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டுள்ளன. இனப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்துவம் வகிக்கவும் சுவிற்சலாந்து அரசாங்கம் இணக்கம் தெரிவித்ததோடு ஜெனீவா நகரில் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்யவும் முன் வந்தது. ஆயினும் சுவிற்சலாந்து அரசின் இந்த யோசனைகளை பிரேமதாசா அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடன், அகதிகள் புனர்வாழ்விற்குப் பொறுப்பான திரு. பீட்டர் ஆபன்ஸ் சிறிலங்கா அரசுடனும். விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொண்டுதமது நாட்டின் சமரச யோசனைகளைத் தெரிவித்தார். இருதரப்பினரும் பேச்சுக்களுக்குஇணங்கினால் சுவிஸ் அரசு மத்தியஸ்துவம் வகிக்க தயாராக இருப்பதாகவும், ஜெனீவா நகரில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை செய்யலாமென்றும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் சுவிஸ் அரசின் மத்தியத்துவத்திற்கு இணக்கம் தெரிவித்தனர். ஆனால் சிறிலங்காஅரசுசுவிஸ் அரசாங்கத்தின் இந்த சமரச முயற்சியை முற்றாகநிராகரித்துள்ளது. ஏற்கனவே,கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளின் மத்தியஸ்துவ முயற்சிகளுக்கும் பிரேமதாசா ஆப்பு வைத்துள்ளது தெரிந்ததே.

# சிறிலங்கா விமானப்படைக்கு சுப்பர்சொனிக்ஜெட் விமானம்

சீனாவில் இருந்து மேலும் பல யுத்தவிமானங்களை சிறிலங்கா விமானப்படை விரைவில் கொள்வனவு செய்யவுள்ளது. இவ் விமானங்களில் சுபபர் சொனிக் விமானங்களும் உள்ளடங்கும் என கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது இதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது எவ். சி. 15, எவ். சி. 27, எவ். F ரக விமானங்கள் உட்பட சோவியத் பாணியிலான மிக் 21 ரக விமானங்களும் அடங்குவதாக தெரிய வருகிறது.

கடந்த ஆண்டிலும் பல விமானங்களையும், கடற்படைக் கப்பல்களையும் சிறிலங்கா கொள்வனவு செய்தது தெரிந்ததே.

### தமிழ் அகதிகள் விவகாரம்

# இந்தியாவின் செயல் குறித்து ஐ. நா. தூதரகம் அதிருப்தி

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பும் விவகாரத்தில் இந்திய அரசு கடைப்பிடித்து வரும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் குறித்து அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் ஏமாற்றமும் அதிருப்தியும் அடைந்திருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பொய்கள் கூறி ஏமாற்றி பயமுறுத்தி படிவங்களில் கையெழுத்து வாங்கி, வலுக்கட்டாயமாக தமிழ் அகதிகள் இலங்கைக்கு கப்பல் ஏற்றப் பட்டுவரும் தகவல்கள் ஐ. நா தூதரகத்திற்கு கிட்டியுள்ளது. இதுபற்றி விசாரணை செய்வதற்காக தமிழ்நாடு செல்வதற்கு ஐ. நா தூதரகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கும் இந்திய அரசு தடைபோட்டுள்ளது. இலங்கைக்குத் திரும்பினால் ஐ நா நிறுவனங்கள் நிவாரணம் வழங்குமென பொய் கூறியும் இந்த அகதிகள் அனுப்பப்பட்டு வருவதும் ஐ. நா அதிகாரிகளுக்கு சினத்தைக் கொடுத்திருக்கிறது.

இவ்விவகாரம் குறித்து ஐ. நா. செயலதிபர் இந்திய அரசுடன் பேசவிருப்பதாகவும் தெரிகிறது.

### "யாழ்ப்பாணத்தில்மனிதஉரிமைகள்"

## பல்கலை. ஆசிரியர்களுக்கு எதுவித தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

""யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்'' என்னும் வெளியீடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வெளிடப்பபடுவதில்லை எனவும், அவ் வெளியீட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் எவரும் சம்பந்தபபடவில்லை எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி பதினெட்டாம் திகதியன்று கூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் கூட்டத்தின் போது மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பா (6 ஆம் பக்கம் பார்க்க)

## குவேக்கர்ஸ் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருந்த ''குவேர்க்கஸ்'' சமாதானக் குழுவினர் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுகொழும்பு திரும்பினர்.

இது பற்றி மேலும் தெரிய [6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டு.வில் 4 தமிழர்கொலை; 25 வீடுகள் எரிக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பன்சோலையில் நான்கு அப்பாவி தமிழ்ப் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

சம்பவதினம் காலை சிறிலங்கா இராணுவ அணியொன்று பன்சோலை, நல்ல தண்ணீர் ஓடை ஆகிய இரு கிராமங்களைச் சுற்றிவளைத்தது. தேடுதல் வேட்டையின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே இந்த நால்வரும் உயிரிழந்தனர்.

பாலிப்போடி ரத்தினம் (தாளங்குடா). ஞானசுந்தரம் (வண்டாரியாவெளி), கோபாலப்பிள்ளை வேலப்போடி, [6 ஆம் பக்கம் பார்க்க]

## நிவாரணத்திற்குச்சென்றதமிழர் மீது முஸ்லிம் காடையர் தாக்கு

(மட்டக்களப்பு)

வாகரைப் பகுதிக்கு நிவாரணம் பெறச் சென்ற தமிழ் மக்கள் முஸ்லிம் காடையர்களால் தாக்கப்பட்டதுடன் நிவாரணப் பொருள்களும் அவர்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பில் தமிழ் மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகிறது, அங்குள்ளசிங்களவர்களுக்குமாதம் [ 6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னார்த் தீவினுள் சிங்களவர் குடியேற்றம்

(மன்னார்)

மன்னார்த்தீவில் சிங்களவர்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். அங்கு வாழும் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அவர்களின் வீடுகளில் கடந்த வருடம் முஸ்லிம்களை குடியமர்த்தி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் இப்பொழுது சிங்களவரையும் குடியமர்த்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் குடியேற்றப்படும் சிங்கள, முஸ்லிம்களுக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளைகளில் ஈடுபட்ட 4 விமானப்படையினர் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி. என்ற போர்வையில் கொள்ளையிட்டு வந்த விமானப்படையைச் சேர்ந்த நான்கு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு, கந்தானை, ஜாஎல, பேலியகொட, களனி போன்ற இடங்களில் கொள்ளையிடுவதற்கும்,கப்பம் பெறுவதற்கும் முயற்சித்த விமானப்படையைச் சேர்ந்த நால்வர் கந்தானைப் பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாகிஸ்தான் பொலிஸ் சூடு

### 7 பேர் பலி; 130 பேர் காயம்;

(இஸ்லாமாபாத்)

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினருக்கும், பேரணி அத்துமீறிப் போகக் கூடாது என்று தடுத்த பாகிஸ்தான் பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் குறைந்தது ஏழு பேர் உயிரிழந்தனர். இவர்களில்இருவர் பொலிசார் எனவும் கூறப்படுகிறது மேலும் சுமார் 130 பேர் வரையில் இந்தக் கலவரத்தில் படுகாயமடைந்தனர்.

பொலிஸாரிடம் விடுதலை முன்னணிப் போராளிகள் துப்பாக்கிகளைப் பறித்துச் சென்றதோடு, சில பொலிஸாரைப் பயணக்கைதிகளாகக் கடத்திச் சென்றதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மேலும் காயமடைந்தவர்களும், உயிரிழந்தவர்களும் உலங்கு வானூர்தி மூலம் (6 ஆம் பக்கம் பார்க்க)

### அமானுல்கா கான் கைது

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமானுல்கா கான் நேற்றுப் பகிஸ்தான் பொலிசாரால் கைது செய்யப்பட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## முக்கிய அறிவித்தல்

புள்ளிவிபர ஆய்வாளர்களுக்கான போட்டிப் பரீட்சை 1992-02-29 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. இதற்கான அனுமதி அட்டைகள் நேற்று [12-02-1992) விண்ணப்பத்தாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை கிடைக்காவிடில் 1992-02.17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கும் 12 00 மணிக்கும் இடையில் யாழ் செயலகத்தில் மாவட்ட புள்ளிவிபரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
12-02-1992.

கா. மாணிக்கவாசகர்
அரச அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்
யாழ். மாவட்டம்.

## இறைச்சிக் கடைகளைக்
## குத்தகைக்கு விடுதல்

புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக இயங்கிவந்த ஆட்டிறைச்சிக் கடையும், மாட்டிறைச்சிக் கடையும் குத்தகைக்கு விடப்படுவது சம்பந்தமாக ஆராயப்பட வேஃடியிருப்பதால் மேற்படி கடைகளைக் குத்தகைக்கு பெற விரும்புபவர்கள் 17-02-92 [திங்கள்] பி ப. 2·00 மணிக்கு சின்னக் கடைச் சந்தைப் பகுதியில் உள்ள யாழ் மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சங்கக் கட்டடத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(2204)

புங்கங்குளம்
சுகாதாரக்குழு.


## நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை மகாதேவன் அவர்கள்

தோற்றம்: 23-03-1927 மறைவு: 14-01-1992

மாதேவன் மலரடி மறவாத தந்தாய்
பூதேவன் புராணம் பாடிய புண்ணியா
சுதுமலை ஈஞ்சடி வயிரவ ராலய
மூதுமை சேர்தர் மகர்த் தாவே
தேவார மினிய திருவா சகம்
நாவால் நவின்ற நற்றவ முனிவா
திருநீறு இலங்கும் திவ்விய நெற்றியும்
திருந்திய சொல்லை நவின்றிடும் நாவும்
சந்தனச் சாந்து சாத்திய நுதலும்
கள்ள மில்லக் கசடறு உள்ளமும்
தெள்ளிய அறிவும் தெளிந்த வுரையும்
கொள்கை தவறாக் கோட்டமில் லுறுதியும்
நேர்பெற எம்மை நெறிப் படுத்திச்
சீர்பெற வைத்த சிறந்த செய்கையும்
தாரணி செஞ்சடைச் சிவனை மறவாது
பாரினில் வாழப் பழக்கிய பண்பும்
எண்ணியே இதயங் கசிந்து
கண்ணீர்ப் பூக்களைச் சொரிகிறோ மிங்கு



சுதுமலை

மனைவி, மக்கள், அத்தான், அக்கா, மருமக்கள்,
பேரப்பிள்ளை, உறவினர்.

(சி/3919)

## வரி விளம்பரம்

### ஆங்கில வகுப்பு

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், சாதாரண தர உயர்தர பரீட்சை எடுத்த மாணவர்கள் சகலருக்கும் தனித்தனி பிரிவுகளாக Grammar, Vocabulary! Spoken English பாட விதானங்கள் ஆரம்பம்15-2-92காலை 9மணி

(1) பரமேஸ்வரா சந்தி -பல்கலைக்கழக அருகாண்மை.

(2) ஞானபண்டித வைத்தியசாலை, குளப்பிட்டி.

(2202)

### வீடமைப்புக்கடன் மீளச் செலுத்தல்

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் கடன் பெற்று அக்கடன் தவணைப் பணங்களை மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்தவர்கள் இவ்விபரங்களைத் தயவு செய்து தங்கள் நலன் கருதி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு நேரடியாகவோ அல்லது கடித மூலமோ உடனடியாக அறியத்தருமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## நினைவு கூருகின்றோம்

## 1992-02-13

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கொக்கிளாய் இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப். சைமன்** (கனகரத்தினம் ரஞ்சன். பிரதான வீதி, பொத்துவில்)

**லெப். பழசு** [முதுங்கொடுவ உடுகமகே கேமசிறி - பருத்தித்துறை]

**வேதா** [கனகு இராசநாயகம் - கண்டாவளை]

**கெனடி** [கனகசபை வில்வராசா - கிரான் மட்டக்களப்பு]

**காந்தரூபன்** [பொன்னையா சந்திரகுமார் - கல்லடி. மட்டக்களப்பு]

**ஜெகன் / இடிஅமீன்** [சண்முகராசா பிரபாகரன் - லிங்கநகர். திருக்கோணமலை[

**காந்தி** [கந்தையா பரமேஸ்வரன் - தம்பலகாமம், திருக்கோணமலை[

**ரவி** [நமசிவாயம் தர்மராஜா - செம்மலை, மணலாறு]

**ரஞ்சன் / மாமா** [பொன்னையா சண்முகநாதன் - கண்டாவளை]

**காத்தான்** [துரைச்சாமி சிறிமுருகன் - இல. 54 குமரபுரம். பரந்தன்]

**மயூரன்** [குணசிங்கராசா துவாரகன் - மீசாலை தெற்கு]

**சொனி** [சதாசிவம் அன்ரனி-நுணாவில், சாவகச்சேரி]

**தனபாலன்** [தியாகராசா வரேந்திரன் - காரைநகர்]

**சங்கரி** [பாலசுந்தரம் பாலகணேசன் - கப்பல் உடையவர் கோவிலடி, வல்வெட்டித்துறை]

**மகான்** [கதிரவேலு செல்வராசா - கம்பர்மலை, வல்வெட்டித்துறை]

**நிமால்** [கந்தையா ஜெயந்தன் - தும்பளை, பருத்தித்துறை]

1986 ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்காப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். தேவா** [சிவராசலிங்கம் சிவகுமார் - பாலம்பிட்டி. மன்னார்]

வவுனியா - பூவரசங்குளத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**சிவா** [வவுனியா]

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**செல்வம்** [சங்கரப்பிள்ளை, லோகநாதன் - மாதர் பணிக்கர். மகிழங்குளம், வவுனியா]

1988 ஆம் ஆண்டு பாவற்கொடிச் சேனையில் இந்தியப் படையினர் எமது முகாமைச் சுற்றிவளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். சூரி** [கணபதிப்பிள்ளை தவராசா - சந்திவெளி. மட்டக்களப்பு]

1989 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**வில்லியம்** [மாணிக்கம் குமார் - சேந்தான்குளம், வவுனியா]

வல்வெட்டித்துறையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு வீட்டுடன் சேர்த்து எரிக்கப்பட்ட தமிழர்கள்

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய

**அற்புதன்** [கிஞ்சில் புகாரி டெனின் - சிலாவத்தை, முல்லைத்தீவு]

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் 2 ஆவது நாளாக சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**மேஜர் ஜோன்சன்** [இராசா இராஜேந்திரன் -பெரியகடை, திருக்கோணமலை]

**ஆனந்தராஜ்**

**முகுந்தன்** [செபஸ்தியாம்பிள்ளை அமலதாஸ் - ஓட்டுத் தொழிற்சாலை, ஒட்டிசுட்டான்]

**அசோக்** [சிதம்பரப்பிள்ளை கருணாகரன்-குமரபுரம்]

**அலெக்சன்** [இரத்தினகோபால் செழியன் - 6 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு]

**கப்டன் லெனின்** [செல்லத்துரை விக்னேஸ்வரன்-பெரியகுளம்வீதி . நெடுங்கேணி]

**றிச்சார்ட்** [வல்லிபுரம் ஜெயரூபன் - புளியங்குளம்]

**அச்சுதன்**

ஆனையிறவு சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**மீனாட்சி** [கலைச்செல்வி இராசரத்தினம்- தென்னன் மரவடி, திருக்கோணமலை]

சிலாபத்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போதுவீரச்சாவெய்திய

**யேசுதாஸ்** [வங்காலை, மன்னார்]

**பேபியன்** [பண்டிவிரிச்சான், மன்னார்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3916)

# காஷ்மீர் எல்லையில் ஆர்ப்பாட்டக்காரர்கள்; எந்த நேரத்திலும் என்னவும் நிகழலாம்

## பாக். பிரதமர் அன்றாட வேலைகள் ஒத்திவைப்பு

(டில்லி)

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினர் ஏற்பாடு செய்திருந்த 'எல்லை தாண்டும் பேரணியினர்' பாக்கிஸ்தானின் தடைகளையும் மீறி எல்லை ஓரக் கிராமங்களை வந்தடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து காஷ்மீர் எல்லையில் எந்த வேளையில் எதுவும் நிகழக்கூடிய பதற்ற நிலை உருவாகியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீர் தலைநகரான முகாராபாத் நகரிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் சுமார் இருபது கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தை கால்நடையாக கடந்து எல்லைக் கட்டுப்பாட்டிற்கு அருகேயுள்ள சனாரே எனுமிடத்தில் கூடியுள்ளனர். இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சனாரேயில் குழுமியுள்ளதாக தெரியவரும் அதேவேளை அவர்களைக் கலைக்க பாகிஸ்தான் பொலிசாரும், இராணுவத்தினரும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு மிகச் சமீபமான ஜஸ்கூல் பகுதிக்கு சுமார் முந்நூறுக்கு மேற்பட்டோர் சென்றடைந்துள்ளனர். இஸ்லாமாபாத் முகவரைத் மேற்கோள் காட்டி ஆகாசவாணி செய்தி வெளியிடுகையில் பாகிஸ்தான் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் பலர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

இதனிடையே பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் தமது வழமையான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்துச் செய்துவிட்டு முகாராபாத் பகுதிக்கு விரைந்திருப்பதாக மற்றொரு தகவல் கூறியுள்ளது.

மேலும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை எவரும் கடக்க வேண்டாமென இந்திய இராணுவம் ஒலிபெருக்கி அறிவித்தல்களை விடுத்த வண்ணம் உள்ளது. பாகிஸ்தான் பொலிசார் எல்லைக்கோடு நெடுகிலும் அமைத்திருக்கும் முட்கம்பித் தடுப்புகளைத் தாண்டி, ஜே. கே. எல். எப்பின் தலைவர் அமானுல்லாகானின் ஆதரவாளர்கள் புகுந்தால் தீவிர சண்டைகள் இடம்பெறலாம் என்று ஆகாசவாணியின் செய்தியொன்று தெரிவித்தது.

## இஸ்ரேலுக்கு 1000 கோ. டா. உதவி புரிய முடியாது

**-ஜேம்ஸ் பேகர்**

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் திட்டங்களுக்கு எதிராக இஸ்ரேல் நடந்து கொள்ளாது என உறுதி அளிக்குமட்டும் இஸ்ரேலுக்கு 1000 கோடி டொலர் நிதி உதவிக்கு சிபார்சு செய்ய முடியாது என அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ஜேம்ஸ் பேகர் செனெட் வெளி விவகாரக் குழுக் கூட்டத்தில் பேசும்போது நேற்று முன்தினம் இதைத் தெரிவித்தார்.

## இஸ். அமெரி. உதவி பி. எல். ஓ. கண்டனம்

(ரியூனிஸ்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதர்குடியேற்றங்களை நிறுவுவதற்காக இஸ்ரேலுக்கு நீண்டகால உதவி அடிப்படையிலான கடனுதவியை அமெரிக்கா வழங்குவதற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செய்தி நிறுவனமான 'வாபா'விற்கு ரியூனியினவைத்து பேட்டியளித்த பி எல். ஓ வின் தலைவர் யாசீர் அரபாத் மேலும் கூறுகையில் அமெரிக்கா இந்த நிதி உதவியை இஸ்ரேலுக்கு வழங்குமானால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் மேற்காசிய சமாதானப் பேச்சுக்களை புறக்கணிக்கும் என்றும் எச்சரிக்கைவெளியிட்டார்.

சோவியத்யூனியனில் இருந்து வெளியேறிய யூதர்களை குடியேற்றுவதற்காக அமெரிக்காவிடமிருந்து இஸ்ரேல் 1000 கோடி டாலர்கள் கடனாகக் கோரியிருந்தது. இத்தகைய குடியேற்றங்கள் அமைக்கப்படுவது பாலஸ்தீன தாயகத்திற்கு அச்சுறுத்தலாகிவிடும் எனப் பி. எல். ஓ. கருதுகின்றது.

## ஆர்மீனிய ராணுவம் சூடு; அசர்பைஜான் மக்கள் காயம்

(மாஸ்கோ)

ஆர்மீனிய - அசர்பைஜான் எல்லையில் ஆர்மீனிய இராணுவத்தினர் அசர்பைஜான் கிராமங்களில் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதால் அசர்பைஜான் கிராமவாசிகள் சுமார் இருபது பேர் காயமடைந்துள்ளனர். பலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஆர்மீனியத் தலைநகருக்கு வந்திருந்த சமயத்தில் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதுஎன அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஜோன்மேயர் வீட்டினுள் ஐந்து இறாத்தல் ரைம்பம்

(லண்டன்)

பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரின் உத்தியோ பூர்வ இல்லத்தில் ஐந்து இறாத்தல் எடையுள்ள நேரப்படி வெடிக்கக்கூடிய குண்டொன்றுகண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கவைக்கப்பட்டது. அயர்லாந்தின் பாதுகாப்புநிலைமைகள் தொடர்பாகஅயர்லாந்தின். நான்கு முக்கிய கட்சிகளின் தலைவர்களோடு பிரதமர் ஜோன் மேயர் பேச்சு நடத்துவதற்கு சில மணிநேரம் முன்பாக இக்குண்டுகண்டு பிடிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது

ஒரு மாதகாலத்தில்10, டப்ளிங் தெரு என்ற முகவரியிலுள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டாவது குண்டு இதுவாகும்.

**சர்வதேச அணுசக்தி**

# விஞ்ஞானிகள் பார்வையிட லிபியா, ஈரான் இணக்கம்

(ஜெனிவா)

லிபியா, சிரியா, ஈரான் ஆகிய நாடுகள் தமது நாட்டிற்கு சர்வதேச அணுசக்திவிஞ்ஞானிகள் வந்து பார்வையிடுவதற்கு அனுமதி அளித்துள்ளன. இருநாடுகள் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களையடுத்து, தாம் இத்தகைய அணுவாயுத தயாரிப்பு எதிலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்காகவே சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அதிகாரிகள் சோதனையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப் போவதாக இவை அறிவித்துள்ளன.

லிபியா, சிரியா, ஈரான் ஆகிய நாடுகள் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சோதனையில் ஈடுபட அனுமதி அளிப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சதாமைக் கவிழ்க்க சி.ஐ.ஏ 3கோடி ஒதுக்கீடு

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசையினை பலவீனப்படுத்த அல்லது பதவி கவிழ்க்க முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி புஷ்ஷின் நிர்வாகம் சி.ஐ.ஏக்கு அதிகாரம் அளித்திருப்பதாக அங்கிருந்து வெளியாகும் லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது

இதற்கென மூன்று கோடி டொலர் ஒதுக்கப்பட்டிருப்பதாக நிர்வாகத்திலுள்ள பெயர் குறிப்பிடப்படாத வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

ஈராக்கின் ஆளும் ஸுன்னி முஸ்லிம் உயர் வட்டாரத்தில் கடந்த சில தினங்களாக சதாமுக்கான ஆதரவு குறைவடைந்து வருவதனை சாதகமாகப் பயன்படுத்தி புஷ் நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஆளும் குழுவினரிடையே பிளவுகள் இருந்தபோதிலும் சதாம் கவிழ்க்கப்படக் கூடிய அளவு அபாயம் உடனடியாக இல்லையெனவும் அவை தெரிவித்துள்ளன.

இதேவேளை சதாமின் அரசியல் சக்தி பலவீனமுற்றிருப்பதாகவும் வளைகுடா யுத்தத்திற்கு முன்பு இருந்ததைவிட அவரது நிலை தற்போது பலவீனமாக இருப்பதாகவும் அதனால் ஈராக்கில் அரசாங்கம் மாறினால் கூட எவரும் கண்ணீர் வடிக்க மாட்டார்கள் எனவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேக்கர் தெரிவித்துள்ளார்.

## 'ஆஸ்கார் விருது'

சினிமாத்துறையில் சிறப்பும் சிறந்ததுமான "ஆஸ்கார் பரிசு" பிரபல திரைப்பட இயக்குனர் சத்யஜித்ரேக்கு கிடைக்கவுள்ளது. சினிமாத்துறையில் இவர் தன் வாழ்நாளில் புரிந்த சாதனைக்காக எதிர்வரும் மார்ச் மாதத்தில் இப்பரிசு அவருக்கு வழங்கப்படவுள்ளது.

## எட்டு பொலிசார் அல்ஜீரியாவில் சுட்டுகொலை

(அல்ஜீரியா)

அல்ஜீரியா இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கெஸ்பா என்னும் இடத்தில் ஆறு பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக்கொன்றனர். காரில் இந்த அதிகாரிகள் சென்று கொண்டிருந்தபோது அடிப்படைவாத இயக்கத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை வேறோரிடத்தில் அடிப்படைவாத இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை கைது செய்ய முயன்ற இரு பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தேர்தல்களை நடத்தக் கோரி அல்ஜீரிய அரசுக்கு எதிராக போராடிவருவது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா - ஜப்பான் பிணக்கை தீர்க்கப் பேச்சு

ஜப்பானும் - ரஷ்யாவும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாக டோக்கியோவில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் முதலில் சோவியத் யூனியனினால் கைப்பற்றப்பட்ட இரண்டு தீவுகளையும் விடுவிப்பதில் ஜப்பான் ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மைக்டைசன்குற்றவாளியாக நீதிமன்றம் கணிப்பு

(அமெரிக்கா)

முன்னைநாள் குத்துச்சண்டை வீரர் மைக்டைசனுக்கு எதிராக அமெரிக்கநீதிமன்றத்தில் தொடரப்பட்ட கற்பழிப்பு வழக்கில்குற்றவாளியாக அவர் காணப்பட்டுள்ளார். இதனால் இவருக்கு60வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

25வயதுடைமைக்டைசன்மீது 18வயதுடைய கறுப்பு அழகுராணி ஒருவரை கற்பழித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

**யூக்கோ.யுத்த நிறுத்தம்**

## கண்காணிக்க மேலும் 25 ஐ. நா. அதிகாரிகள்

யூகோஸ்லாவியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கவென மேலும் 25 இராணுவ இணைப்பதிகாரிகளை ஐ.நாவின் பாதுகாப்புச் சபை அனுப்பி வைத்துள்ளது.

இந்த இணைப்பதிகாரிகள் குரேஷியா சேவியாப்பகுதிகளில் இராணுவக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கு முன்னர் ஐநா பாதுகாப்புச்சபையால் அனுப்பப்பட்ட 25 அதிகாரிகளும் தொடர்ந்தும் அங்கேயே இருப்பர் என ஐ நா. பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

## 4-வது போரை பாகிஸ்தான் விரும்பவில்லை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் நான்காவது போர் ஒன்றைத் தொடங்கப் பாகிஸ்தான் விரும்பவில்லை என்று இஸ்லாமாபாத்தில் அந்நாட்டுப் பிரதமமந்திரி நவாவ் ஷெரீப் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணிப் பேரணி கட்டுப்பாட்டு எல்லையைக் கடப்பதை பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகள் தடுத்து விடும் என்று தான் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# தி. மு. க. ஊர்வலங்களுக்குத் தடை; அதிகார கர்வத்தின் வெளிப்பாடு

## தி. மு. க. தலைவர் கருணாநிதி கண்டனம்

(சென்னை)

ஊர்வலம் மீதான நிபந்தனை அதிகாரத்தில் இருப்பவர்களின் கர்வத்தனத்தின் வெளிப்பாடேஎனஅண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தி மு க. தலைவர் கருணாநிதி கண்டித்துள்ளார்.

தி. மு. கவினர் இனிமேல் ஊர்வலம் நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமானால் வன்முறைகள் இடம்பெறாது என்றும் அவ்வாறு வன்முறைகள் இடம்பெற்றால் எந்த ஒரு இழப்பிற்கும் சேதத்துக்கும் நஷ்டஈடு தருவதாக உறுதி அளிக்க வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஏற்கனவே நிபந்தனை விதித்தது தெரிந்ததே.

இது தொடர்பாகவே கருணாநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் வெளியிட்ட அவ் அறிக்கையில் காவிரி நீர்ப் பிரச்சினை உச்சகட்டத்தில் இருந்தபோது மத்திய அமைச்சர் பா சிதம்பரத்தின் கார்மீது திருச்சியில் அ. தி. முகவினர் நடத்திய தாக்குதலை கலைஞர் நினைவு படுத்தத் தவறவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா நடைமுறைச் சாத்தியமற்ற



நிபந்தனைகளை விதிப்பதை விடுத்து சகலரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறானால்தான் நாம் பொலிசார் மீது குற்றஞ்சாட்டுவதை தவிர்க்க முடியும் என்றும் கருணாநிதி அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பெப்ரவரி மூன்றாம் திகதி தி. மு. க. வினர் சென்னையில் ஊர்வலமாகச் சென்று தமிழக ஆளுநரிடம் மகஜர் ஒன்றை கையளித்தபோது ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து ஜெயலலிதா ஊர்வலம் தொடர்பான மேற்கண்ட நிபந்தனையை விதித்தார்.

டடா சட்டத்தை பயன்படுத்தி தமிழக அரசு மினி அவசரகால நிலையை மாநிலத்தில் அமுல் செய்வதாகவும் அதற்கு முடிவு கட்டக் கோரியுமே தி. மு. க வினர் கருணாநிதி தலைமையில் ஆளுனரிடம் மகஜர் கையளித்தனர்.

அன்று இடம்பெற்ற வன்முறைகளை கட்டுப்படுத்த பொலிசார் கடுமையான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியதாயிற்று என்பது தெரிந்ததே.

## தனது கூற்றை சோலங்கி வாபஸ்

(டில்லி)

அணுசக்தி வல்லரசாகும் விளிம்பில் இந்தியா இருப்பதை உணர்த்தும் ஒரு கூற்றை வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி பின்னர் அதை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

### காவிரிநீர்ப் பிரச்சினை

## ஜெயலலிதா - பங்காரப்பா டில்லியில் பேச்சுவார்த்தை

(டில்லி)

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவும், கர்நாடக முதலைமைச்சர் பங்காரப்பாவும் எதிர்வரும் திங்களன்று புதுடில்லியில்பேச்சுவார்த்தை நடத்ததுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது பிரதமர் பி வி. நரசிம்மாரவின் முயற்சியினால் சந்திக்கும் இவர்கள் காவிரிநீர் தகராறு தொடர்பாக பேச்சுகள் நடத்தவுள்ளனர்.

இதனை புதுடில்லியில் அறிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா தான் கர்நாடக முதல்வர் பங்காரப்பாவைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்ததாக வெளிவந்த செய்திகளை மறுததுடன், இத்தகைய சந்திப்புக்கு முன் சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

மேலும் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர் தற்போது அவர்களது நடவடிக்கைகள் முற்றாக ஒடுக்கப்பட்டு



விட்டதாகவும், தமிழக அரசு புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

# கருணாநிதியின் குற்றச்சாட்டு ஆதாரம் எதுவும் அற்றது

## சி. பி. ஐ அதிகாரிகள் தெரிவிப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தி. மு. க. எம் பியான வை.கோபாலசுவாமியை சம்பந்தப்படுத்துவதற்கேதுவாக வாக்கு மூலத்தை பெறுவதற்காக சென்னை மத்திய சிறையில் இருக்கும் ''டடா'' சட்டக் கைதியான ''குணா'' வை சி. பி. ஐ அதிகாரிகள் சித்திரவதை செய்வதாக தி மு. க. தலைவர் கருணாநிதி தெரிவித்த குற்றச்சாட்டை ஆதாரமற்றதென ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் விசேட விசாரணைக்குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள்.

குணா உட்பட ஐந்து டடா கைதிகளை டிசம்பர் 30 இல் சி. பி. ஐ அதிகாரிகள் விசாரணை செய்த போது மூன்றாந்தரமான வழிமுறைகளை கையாண்டதாக கருணாநிதி குற்றம் சாட்டியிருந்தார்.

விசேட நீதிமன்றத்தின் முன் அனுமதியுடன் தான் ஐந்து கைதிகளும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் அதுவும் சிறைச்சாலை அதிகாரியும் அப்போது பிரசன்னமாயிருந்தனர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட எவரும் பயமுறுத்தப்படவோ தவறாக நடத்தப்படவோ இல்லை என சிறை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டிருக்கிறார்.

கைதிகள் மீதானவிசாரணை முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்னரே சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது விசேட விசாரணைக்குழுவின் முயற்சிகளுக்கும் அதன் பிரதிமைக்கும் சேறுபூச மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இது என்பது அதன் மூலம் நிரூபணமாகிறது என்றும் விசேட விசாரணைக்குழு கூறியிருக்கிறது.

விஷேட விசாரணைக் குழுவினர் அரசியல் கருவிகளாகி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணையில் ஆரம்பம் முதலிருந்தே எந்தவொரு அரசாங்க அமைப்போ அல்லது தனிநபரோ அரசியல் ரீதியில் தலையிட்டது கிடையாது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது விஷேட விசாரணைக்குழு அதற்குக் கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையிலேயே விசாரணைகளை நடத்துகிறது. எந்தப் பயமும் இன்றி எவருக்கு சாதகமும் இன்றி இதே பாணியில் விசாரணைகள் தொடரும்.

ஒருவர் எந்தப் பதவியில் இருந்தாலும் எந்த அந்தஸ்தை கொண்டிருந்தாலும் அவரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான திட்டவட்டமான சான்றுகள் இருக்குமானால் அதை விஷேட விசாரணைக்குழு செய்தே தீரும்.

ஈ. பி. ஆர். எல். எப். தலைவர் பத்மநாபா கொலை தொடர்பாகவே குணா என்ற புலிகள் இயக்கத் தீவிரவாதி டடா சட்டத்தின் கீழ் கைதானார். குணாவை சி. பி. ஐ அதிகாரிகள் சித்திரவதை செய்ததாக தெரிவிக்கும் முறைப்பட்டு விசாரணைகள் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்னர் அதுவும் ஒரு பத்திரிகையில் மாத்திரம் வெளியாகி இருப்பது அதிர்ச்சி தருகிறது என்றும் விஷேட விசாரணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# எம்.ஜி.ஆருக்கு மரியாதை சட்டசபையில் வாக்குவாதம்

எம். ஜி. ஆருக்கு மரியாதை செலுத்துவது தொடர்பாக கடந்த வாரம் தமிழக சட்டசபையில் ஆளும்கட்சி எம் எல் ஏக்களுக்கும் அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எஸ் திருநாவுக்கரசுவுக்குமிடையே சுவாரஸ்யமும் சுறுசுறுப்பும் கலந்த வார்த்தைப் பரிமாறல்கள் நடந்தன. இது ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போதே நடைபெற்றது

இவ்வருடம் திறக்கப்பட்ட கட்டடங்களுக்கும் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கும் எம். ஜி. ஆர் பெயரைச் சூட்டுவதன் மூலம் அவரது பவள விழாவை அரசாங்கம் நினைவு கூரவேண்டும் என திருநாவுக்கரசு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

எம். ஜி. ஆர் முதலமைச்சராக இருந்தபோது அண்ணாவின் பவளவிழா வந்தது. அதை அனுஷ்டிக்க எம் ஜி.ஆர் அவ்வருடம் அண்ணாவின் பெயர்களைச் சூட்டினார் என்றும் அவர் நினைவு படுத்தினார்.

அப்போது குறுக்கிட்ட அ. தி. மு. க எம். எல். ஏ. வி. சத்தியமூர்த்தி ஆளும் கட்சிக்காரர்களின் இதயங்களில் எம். ஜி. ஆர் குடியிருக்கின்றார். எனவே அவரை நினைவு கூருவது என்ற பிரச்சினையே இல்லை என்று குறிப்பிட்டார்.

உடனே இதற்குப் பதிலளித்த திருநாவுக்கரசு ''ஆம் ஆம் இந்தளவிற்கு நீங்கள் எல்லோரும் எம். ஜி. ஆரில் அன்பும் மரியாதையும் வைத்திருந்தபடியால் தான் ஆளுநர் தனது உரையின் போது எம் ஜி. ஆரின் பெயரைக் குறிப்பிட்ட போது நீங்கள் (ஆளும்கட்சியினர்) மேசைகளில் தட்டி ஆரவாரம் செய்யவில்லையோ? வியப்பாக இருக்கிறதே'' என்றார்.

ஒரு போக்குவரத்துக் கழகத்துக்கு எம். ஜி ஆரின் பெயரை முதலமைச்சர் ஜெயலலிதா அண்மையில் சூட்டியிருக்கிறார் என்று பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் எம். ஜி ஆரின் பெயரைக் கொண்ட மருத்துவக் கல்லூரியின் பெயரை தி. மு. க ஆட்சியின் போது கருணாநிதி மாற்றினார். அப்போது திருநாவுக்கரசு ஆட்சேபம்தெரிவிக்காதது ஆச்சரியமாகவிருக்கிறதே என்றார்.

### ராஜீவ் கொலையில்

# கோபாலசாமியையும் சேர்க்க கைதி மீது சித்திரவதை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் திராவிட முன்னேற்றக்கழக எம். பியான வை. கோபாலசாமியை தொடர்புபடுத்தி வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்கு குணா அல்லது குணராஜ் என்ற டடா சட்டக் கைதியை சி பி. ஐ அதிகாரிகள் சித்திரைவதைக்குள்ளாக்கிய சம்பவத்தை தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி வன்மையாக கண்டித்துள்ளார்.

இக்கொலை பற்றி கோபாலசாமி முன் கூட்டியே தெரிந்திருந்தார் என்று கூறுமாறு தன்னை சி. பி. ஐ. அதிகாரிகள் சித்திரவதை செய்து நிர்ப்பந்தித்ததாக விசேட நீதிபதிக்கு குணா கடிதம் எழுதியதாக செய்திகள் தெரிவிக்கின்றன எனவும் கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது கொலையின் பின்னணியில் இருந்த உண்மையான குற்றவாளிகளை பிடிப்பதற்கு பதிலாக சித்திரவதை முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்வது மனிதத்துக்கும் மனித உரிமைகளுக்கும் பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ராஜீவ் காந்தி கொலை வழக்கை முழு உலகமுமே அவதானித்துக் கொண்டிருக்கிறது அவ்வழக்கில் அப்பாவிகளை சம்பந்தப்படுத்துவதற்கான எந்தவொரு தவறான முயற்சியும் விசாரணைகளின் மீதான நம்பிக்கையையும், சட்டநீதி அமைப்பு முறை மீதான நம்பகத் தன்மையையும் இல்லாமல் செய்துவிடும். ராஜீவ் கொலை தொடர்பான விசாரணையை அரசியல் பழிவாங்கலுக்கான கேலிக் கூத்தாகத் தரங்குறைப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் உண்மையான குற்றவாளிகள் மறைந்து கொள்ளவே இது உதவும்.

இத்தகைய சித்திரவதைகளை நிறுத்துமாறு சி. பி ஐ. அதிகாரிகளுக்கு பிரதமர் பி. வி. நரசிம்மராவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். வி. சவானும அறிவுறுத்த வேண்டும் எனவும் கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# டில்லியின் அழைப்பை சென்னை புறக்கணிப்பு

1991-93ஆம் ஆண்டுகிட்டத்தில் துறைவாரி நிதி ஒதுக்கல் சம்பந்தமாக பேசி முடிவெடுக்க தலைமைச் செயலாளரை அனுப்புமாறு இந்திய மத்திய அரசு விதித்திருந்த அழைப்பை தமிழக அரசு நிராகரித்துவிட்டது தமிழகத்துக்கான திட்ட ஒதுக்கல் அளவே இன்னும் தீர்மானமாகாத நிலையில் துறைவாரி நிதி ஒதுக்கல் குறித்துப் பேசத் தேவையில்லை என்று புதுடில்லிக்கு அனுப்பியுள்ள பதிலில் தமிழக அரசு கூறியுள்ளது.

ஏற்கனவே அறிவித்ததை விட கூடுதலாக நிதி ஒதுக்குமாறு கேட்டு திட்டக்கமிஷன் துணைத்தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். அதே சமயத்தில் குறைந்த ஒதுக்கீட்டுக்கு ஆட்சேபம் தெரிவித்து பிரதமருக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார். திட்டக் கமிஷன் இதை ஆராய்ந்து வருகிறது.

1992-93ஆம் ஆண்டுக்கு தமிழகம் கோரிய தொகை 1790கோடி ரூபா. திட்டக் கமிஷன் ஒப்புதல் தந்த தொகை 1496 கோடி ரூபா.

அடுத்தகட்ட நடவடிக்கையாக துறைவாரி நிதி ஒதுக்கல் பற்றி முடிவு செய்ய தலைமைச் செயலாளரை அனுப்புமாறு திட்டக் கமிஷன் கூறியிருக்கிறது. இதற்கிடையில் திட்ட ஒதுக்கீடு இறுதியாக்கப்படவில்லை என்று தமிழக அரசு கூறியிருக்கிறது.

## சிந்தனைக்கு

உனக்கு என்ன அவக்கேடு நேரிட்டாலும் அது உன் கைகள் சுற்றியுள்ள ஒரு செயலின் விளைவுதான்.

- முகம்மது நபிகள்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 13-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# சிறிலங்காவில் தீயசக்திகள் யார்?

பௌத்தர்களுக்கும், கிறீஸ்தவர்களுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்த சில தீய சக்திகள் முனைகின்றன என தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. கே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான், இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டபோது அதற்கு எதிராக சிங்களப் பேரினவாத சக்திகள் கிளர்ந்தெழுந்தன. அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக மட்டுமல்ல, மலையக மக்களுக்கு எதிராகவும், அவை இனவாதத்தைக் கக்கின. அது இன்றும் ஓயவில்லை; தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஆனால், தொண்டமானுக்கு எதிராக பௌத்த பிக்குகளின் தலைமையில் சிங்களப் பேரினவாத சக்திகள் கிளர்ந்தெழுந்த போதும், மலையகத்தில் குழப்பம் விளைவிக்க சில நாசகாரச் சக்திகள் முனைவதாக சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்தது. ஆனால், அச் சக்திகள் யார் என்பதைக் வெளிக்காட்டவோ, அல்லது அவற்றைத் தடுத்து நிறுத்தவோ, அன்றி அச் சக்திகளைப் புறந்தள்ளி தொண்டமானின் சமரச முயற்சிகளைத் தொடரவோ அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை.

தற்பொழுது பௌத்தர்களுக்கும் கிறீஸ்தவர்களுக்கும் இடையில் ஒரு மோதலை ஏற்படுத்த சில தீயசக்திகள் முனைவதாக அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அச்சக்திகள் யார்? அவர்கள் எதற்காக இதில் ஈடுபடுகின்றார்கள் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை ஆனால், இதுமறைத்துவிடக்கூடியதொன்றல்ல.

அமைச்சர் தொண்டமானை, அடுத்து இனப்பிரச்சினைத் தீர்விற்கு சமாதான முறையில் ஓர் அரசியல்தீர்வு எட்டப்படவேண்டும் என்ற நந்நோக்கில் தீவிரமுயற்சியில், சில கிறீஸ்தவப் பாதிரிமாரும், கத்தோலிக்க மதகுருமாரும் இறங்கியுள்ளனர். அவர்கள் இது தொடர்பாக யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுமுள்ளனர். இதுவே தற்பொழுது கிறீஸ்தவர்களுக்கு எதிராகப் பேரினவாத சக்திகள் குரல் எழுப்புவதற்குக் காரணமாகும்.

கிறிஸ்தவ குருமாருக்கு எதிராக முதலில் குரல் கொடுத்துள்ளவர் மல்வத்த பீடாதிபதியான ரம்புவெல விசுபாசி தேரோவாகும். கிறிஸ்தவக் குருமாரின் யாழ். விஜயத்தையும், புலிகளுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதையும் அவர்கள் கண்டித்துள்ளார். அதாவது. அமைச்சர் தொண்டமானின் சமரசத் திட்டத்திற்கு பௌத்தபீடங்களில் இருந்து குறிப்பாக, மல்வத்த பீடாதிபதியிடமிருந்தே முதலில் எதிர்ப்பு வந்தது போன்று கிறீஸ்தவ பாதிரிமார்களின் சமாதான யோசனைகளுக்கும் முதலில் அங்கிருந்தே எதிர்ப்புக்கள் கிளம்பின. தொண்டமானுககு எதிரான நடவடிக்கைகள் மலையக மக்களுக்கு எதிரான குரலாக மாறியது போன்று பாதிரிமாருக்கு எதிரான குரல் கிறீஸ்தவ மக்களுக்கு எதிராக மாறியுள்ளது என்பதே உண்மை.

பௌத்த பேரினவாதிகளைப் பொறுத்து தமிழர் மட்டும்தான் அவர்களின் விரோதிகள் அல்லர். பௌத்த சிங்களவர் அல்லாத அனைவருமே விரோதிகள் தான். இதற்கு இன, மொழி, வேறுபாடு கிடையாது. இதனை விளக்க இலங்கையின் வரலாறே போதுமானது. காலத்திற்குக் காலம் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் ஏனைய மதங்கள், மொழிகள், இனங்கள் மீது ஏதோ ஒரு வகையில் அடக்குமுறையையும், வன்முறைகளையும் மேற்கொண்டு வந்துள்ளன.

இந் நிலையில் அமைச்சர், தீயசக்திகள் பௌத்தருக்கும் கிறீஸ்தவர்களுக்கும் இடையிலும், தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலும் மோதல்களைத் தூண்ட முயற்சிக்கின்றன எனப் பேசுவது மக்களையும் ஏமாற்றி தன்னையும் ஏமாற்றும் செயலாகும். இலங்கையில் மோதல்களுக்குக் காரணமே பௌத்த சிங்கள பேரின வாத சக்திகள் தான். அதற்கு தூண்டுதல்களாகவும், தூணாகவும் நிற்பவர்கள் பௌத்த பீடாதிபதிகளும், பிக்குகளும், சிங்கள அரசியல் வாதிகளும் ஆகும். இதனை அமைச்சர் மறைக்க முற்படுவது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயலாகும்.

# மனிதர்களை மறைப்பதில் சிறிலங்கா உலக சாதனை

—லலித் அத்துலத் முதலி

(மாத்தளை)

உலகத்தில் அதிகமான மனிதர்கள் கடத்தப்படுவதும், காணாமல் போவதும், கொலை செய்யப்படுவதும் சிறிலங்காவிலேயே ஆகும். இதனால் உலகில் பெரும் சாதனையை சிறிலங்கா நிலை நாட்டி வருகிறது என ஐ. தே. க. அதிருப்தியாளரின் அரசியல் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கருத்தரங்கொன்று கம்பிறுப்பிட்டியாவில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஒரு ஜனநாயக நாட்டில் எவர் தவறு செய்தாலும் அவரைச் சட்டத்தின் மூலமே தண்டிக்கவேண்டும், இதுதான் ஜனநாயக மாபு. ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியினரின் ஜனநாயக கோட்பாடுகளை எல்லாம் மட்டம்தட்டி வருகின்றனர்,

புத்தசமயமும் தர்மமும் அரசோச்சுகிறது எனக்கூறும் இந்த நாட்டில் இன்று மாதமொன்றுக்கு 1000 க்கும் அதிகமான உயிர்கள் அநியாயமாக பறிக்கப்படுகின்றன.

நாம் மக்களின் கருத்தை அறிய எப்பகுதிகளில் கருத்தரங்குகள் கூட்டங்கள் வைக்கின்றோமே அங்கெல்லாம் எமக்கு பொலிஸார் தொல்லைகளை அளிக்கின்றார்கள்

இன்று மக்களின் ஜனநாயக சுதந்திரத்துக்கு சவால் விடக்கூடிய விதத்தில் எந்த சக்தி முனைந்தாலும் அவற்றுக்கெதிராகப் போராட நாம் தயங்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

# கருத்தடை மாத்திரைகள்; அவதானம் தேவை

- ரேணுகா ஹேரத்

(கொழும்பு)

இலங்கை போன்ற நாடுகளுக்கு புதிய கருத்தடை மாத்திரைகள் பாதுகாப்பிற்கும் நீண்டகால பாவனைக்கும் உகந்தனவா என்பதனை ஆராய்ந்து அறிந்து கொண்ட பின்னரே அவற்றைப் பெண்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்

இவ்வாறு சுகாதாரமகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் ஹோட்டல் லங்கா ஒபரோயில் நடைபெற்ற சுகாதார இயக்குநர்களின் 5-வது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் எமது நாட்டில் பயனபடுத்துகின்ற வில்லைகளில் அநேகமானவை அதி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உற்பத்தியானவையாகும் அந்நாடுகளில உள்ள பெண்களுக்கும். எமது நாட்டுப் பெண்களுக்கும் இடையில் உடல்வலு பழக்கவழக்கம், போஷாக்கு குறைவு என்பனவற்றில் வேறுபாடு உண்டு. எனவே இந் நாட்டுப் பெண்களுக்கு கொடுக்கும் மருந்தின் அளவு, பக்க விளைவு என்பனவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தியா - சிறிலங்கா

# புலனாய்வுத் துறையினர் இணைந்து செயற்பாடு

(கொழும்பு)

கொழும்பின் குற்றத்தடுப்பு பணியகத்துடன் இந்தியப் புலனாய்வாளர்கள் நெருங்கிப் பணியாற்றி வருவதாக உத்தியோக பூர்வமாக கொழும்பு வானொலி அறிவித்தது. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக புலனாய்வு செய்துவரும் விசேட குழுவை சேர்ந்த அதிகாரிகள் இதற்காக ஏற்கனவே கொழும்பு வந்துள்ளனர் இவர்கள் தற்போது கொழும்பில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழிளைஞர்கள் பன்னிரண்டு பேரை விசாரணை செய்திருப்பதுடன் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றி பரவலான முறையில் புலனாய்வு செய்து வருவதாகவும் பயனுள்ள தகவல்கள் பரிமாறப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த வேலணை

# கொத்தணி மாணவருக்கு இலவச பாடக் கொப்பி

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டத்தில் நான்கு கொத்தணிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதனால் 45 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை பெறுகிறார்கள். வேலணைக் கோட்டம் நடத்திய கலை விழாவில் வசூலிக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியிலிருந்தே இந்த அப்பியாசக் கொப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இதேவேளை, தீவகத்தைச் சேர்ந்த கொழும்பு வர்த்தகர்களிடம் நிதி உதவி பெற்று இடம்பெயர்ந்த வசதி குறைந்த தீவகப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடைகள் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் தெரிவித்தார்.

# தடைமுகாமிற்குள் செல்ல வாசுதேவாவிற்கு தடை

(கொழும்பு)

ஐக்கிய சோசலிஸ முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா பெல்வத்த இராணுவ தடை முகாமினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 27 ஆம் திகதி வாசுதேவ நாணயக்கார பெல்வத்த இராணுவ முகாமுக்கு விஜயம் செய்த சமயம் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டார். கூட்டுப் படைகள் நடவடிக்கைத் தலைமையகம் இதற்கான அனுமதியை வழங்காததால் வாசுதேவா உள்ளே செல்ல முகாமின் தளபதி அனுமதி வழங்க மறுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலைக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக் கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் இருபத்திநான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டி பதினைந்துவயதுக்குட்பட்ட மாணவர்களுக்கே நடைபெறவுள்ளது.

# குடும்பஸ்தர் சுட்டுகொலை இராணுவ சிப்பாய் கைது

அம்பாறை மாவட்டத்தில் தெஹிஅன்றரக்கண்டிய என்ற இடத்தில் ஏ.பி. பிரேமதியக்க (வயது:40) சனியன்று அதிகாலை அவர்இல்லத்தில்வைத்துச்சுட்டுக் கொல்லப்பட்டார் இது தொடர்பாக இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார் கொலையை அடுத்து சம்பவம் நடந்த இடத்தில் T-56ரக வெற்றுரவையும், ராணுவச்சிப் பாய்கள் அணியும் தொப்பியும் கண்டெடுக்கப்பட்டது.

சம்பவம்நடந்த இடத்துக்கு கொண்டுவரப் பட்ட பொலிஸ் நாய், மோப்பம் பிடித்து தடத்தைப் பின் தொடர்ந்து அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்குள் நுழைந்தது இதனைத் தொடர்ந்தே சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

சனியன்று அதிகாலை. வீட்டிற்குள் புகுந்த நபர் ஒருவர் தன்மீது பலாத்காரம் பாவிக்க முயற்சித்தபோது, தனது கணவர் தடுக்கவே, அவரை அந்த நபர் சுட்டுக் கொன்றார் என்று காலஞ்சென்றவரின் மனைவி மரண விசாரணையில் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக சமன்புர இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர் சுட்டுக்கொலை

[சென்னை]

இந்திய கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் நாடு மீனவர்கள் மீது நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர் இறந்தவரைக் காயமடைந்தவர் தூக்கிச் சென்றனர் என இந்தியவானொலிஅறிவித்துள்ளது

இந்த மீனவர்கள் சிதம்பரனார் மாவடடத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டியூர் காவல் நிலையத்தில் இதுபற்றி புகார் செய்யப்பட்டுள்ளது.

# 1,50,000 இலங்கைத் தமிழர் மேற்கு நாடுகளில் தஞ்சம்

(கொழும்பு)
மேற்கு நாடுகளில் குறைந்தது 1,50,000 இலங்கைத் தமிழ் அகதிகள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தஞ்சம் கோருபவர்களில் அதிகமானோர்வடபகுதியைச் சேர்ந்த அரசியல் வாதிகள், அரச ஊழியர்கள், மற்றும் மருத்துவம், சட்டத்துறை சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

பிரான்சிலும் கனடாவிலும் 70,000 பேரும், சுவிற்சலாந்தில் 20,000 பேரும், ஜெர்மனியில் 25 000பேரும் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை இன்னும் கூடுதலாக இருக்கலாம் என்று கொழும்பு வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தஞ்சம் கோருபவர்கள் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்டஅரசுகள் இரகசியமாகப் பாதுகாப்பதால் இந்த எண்ணிக்கையை ஊர்ஜிதம்செய்யமுடியவில்லை என்று இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 'ராமானுஜத்தில்' 500 அகதிகள் தலைமன்னார் வருவர்

(சென்னை)
இராமநாதபுரம் மண்டபம் முகாமில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் வரும் 18ஆம் திகதி முதல் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு அனுப்பிவைக்கப்படஉள்ளனர். அகதிகளில் முதலாவது தொகுதியில் 500 பேர் பி. எஸ். எஸ். ராமானுஜம் என்னும்கப்பலில் அனுப்பி வைக்கப்பட உள்ளனர். இந்த தகவலை இராமநாதபுரம் ஆட்சித் தலைவர் ஆதிஷேசையா தெரிவித்தார்.

இவர்கள் மன்னாரிலுள்ள அகதி முகாம்களில் தங்கவைக்கப்படுவார்களென்றும் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், சனிகிழமைகளில்இந்தக்கப்பல் அகதிகளை ஏற்றிக்கொண்டு மன்னார் செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 16 தமிழ் இளைஞர்கள் மகசின் சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)
பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் பதினாறு தமிழிளைஞர்கள் மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் விடுத்த வேண்டுகோளையடுத்து இம் மாற்றம் செய்யப்படுவதாக பாதுகாப்பு அமைச்சுக் கூறியுள்ளது.

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை;

## பதினாறு நிலையங்களில் 2,400 பரீட்சார்த்திகள்

(யாழ்ப்பாணம்)
அமைய எழுதுவினைஞர் தெரிவுக்காக யாழ். மவட்டத்தில் நாளை மறு தினம் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கு2400பேர் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான பரீட்சைகள் பதினாறு நிலையங்ளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நேற்றுக்காலை இப்பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் உட்பட மேற்பார்வையாளர்களும் கலந்து கொண்ட இக் கூடடத்தில் பரீட்சார்த்திகளின் அடையாள அட்டைகள் மிகவும் உன்னிப்பாகப் பரிசீலிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இப்பரீட்சையின் பெறுபேறுகள் இரு வாரங்களில் வெளியாகும் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## எண்ணெய் வித்துக்கள் கொள்வனவு

தமிழீழ ஆய்வு நிறுவனம் முல்லைத்தீவு பகுதியில் ஆமணக்கு விதை, வேப்பம்விதை, இலுப்பைவிதை போன்ற எண்ணெய் வித்துக்களை கிராமிய உற்பத்திக் குழுக்களுடாக விலைக்கு கொள்வனவு செய்து வருகின்றது.

தேசிய அடையாள அட்டை தவறி

## இடம் பெயர்ந்தோருக்கு பரீட்சை எழுத ஒழுங்கு

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த தேசிய அடையாள அட்டைகளை தவறவிட்ட எழுது வினைஞர் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்கள் நிரந்தர பகுதி கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தி அப்பகுதி உ.அ அதிபரினால் மேலொப்பம் இடப்பட்ட புகைப்படத்துடன் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள் என இன்று யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார். இது இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள தேசிய அடையாள அட்டைகளை தவறவிட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் கூறினார். (88)


கண்ணீர் அஞ்சலி

உயர் திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
(உரிமையாளர்: சுப்பிரமணிய புத்தகசாலை)

இறைவனடி சேர்ந்த உயர் திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்

நாவலர் புத்தகசாலை
(2203) புலோலி,


## 3 தமிழ் இளைஞர் நுவரையில் கடத்தல்

(நுவரை)
நுவரேலியாபகுதியில் மூன்று வெவ்வேறுபகுதிகளில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

தனியார் வாகனமொன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இராஜேந்திரன்என்பவர் ரதல்ல என்னும் இடத்தில் வைத்து இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் வந்தோரால் கடத்திசெல்லப்பட்டார்.

இராகனையை சேர்ந்த தினேஷ் என்பவரை சிவில் உடையில் வந்தோர் தாம் பொலிசார் என கூறி கடத்திச் சென்றுள்ளனர்.

சோமசுந்தரம் என்பவர்நுவரெலியா நீதி மன்றத்துக்கு சென்று விட்டு திரும்பும் வழியில் சிவில் உடையில் வந்தவர்களால் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டார்.


யாழ்ப்பாண மாநகரசபை

வீதித்தடை பற்றிய அறிவித்தல்

இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள கம்பன் விழாவை முன்னிட்டு இத்திகதிகளில் தினமும் பிற்பகல 3-00 மணியிலிருந்து இரவு 10-00 மணிவரை நல்லை ஆதீனத்தின் முன்பாகவுள்ள பருத்தித்துறை வீதியையும் கோவில் வீதியையும் இணைக்கும் வீதியால் வாகனப் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கும்படி பொது மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 12-02-1992
மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்.
(சி/3920)


## இழுவைப்படகு சேதம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை துறைமுக இறங்குதுறையில் பாவனையில் இருக்கும் இழுவைப் படகுகளில் ஒன்று மீண்டும் சேதமடைந்திருக்கிறது இதனால் பொருள்கள் இறக்கும் வேலைகளின் வேகம் குறைந்திருக்கிறது இவ் இழுவைப்படகு முன்னர் சேதமடைந்ததால் திருத்த வேலைகள் முடிவடைந்து அண்மையிலேயே பாவனைக்கு எடுத்துவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

சிறிலங்கா பொலிஸ் அமைப்பை

## பிரதேச மட்டத்தில் பன்முகப்படுத்த திட்டம்

(கொழும்பு)
பிரதேச சபை மட்டத்தில் சிறிலங்கா பொலிஸ் அமைப்பையும் பன்முகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது அதிக எண்ணிக்கையான பொலிசாரைக் கொண்ட பொலிஸ்பிரிவு நிலையங்களுக்குப் பதிலாக, பிரதேசசபை மட்டத்தில்சிறிய அலகுகளாகப் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுஒரு சிக்கன நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது.

அமைச்சரவையில்

## தொண்டா இடம்பெறுவது பெருமைக்குரிய விடயம்

-அமைச்சர் ரணசிங்கா

(கொழும்பு)
திறமை மிக்க திரு. தொண்டமானை எமது அமைச்சரவையில் கொண்டிருப்பதற்கு சிங்களவராகிய நாம் பெருமைப்பட வேண்டும் என்று தகவற்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா கூறியுள்ளார்.

அமைச்சர் ரணசிங்க மேலும் கூறுகையில் தொண்டமான் ஒரு தூரதிருஷ்டி மிக்க தலைவர். அவர் ஒரு திறமைசாலி அவர் நல்ல முறையில் சேவையாற்றி வருகிறார். அமைச்சர் தொண்டமானின் வேலைத் திறனை பாராட்டிக் கருத்து வெளியிட்டார்.

பௌத்தர் - கிறிஸ். இடையில்

## "மோதலை ஏற்படுத்த தீய சக்திகள் முயற்சி"

(கொழும்பு)
பௌத்தர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே மோதல்களை ஏற்படுத்த தீய சக்திகள் முயற்சிக்கின்றன என்று தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே ரணசிங்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்குப் பகுதியில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை வெற்றியளித்துவரும் இத்தருணத்தில் சில தீய சக்திகள் பௌத்தர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்குமிடையில்மோதல்களை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனஎனவும் கூறினார்.

## 'ஐலண்ட்' செய்திக்கு ரணதுங்கா மறுப்பு

மேலதிகமாகஎவரையும் உதவிப்பொலிஸ்அத்தியட்சகராக நியமிக்கும் எண்ணம் எதுவும் இல்லை என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு பெற்ற 82 பேருக்கு புறம்பாக மேலும் 10 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட இருப்பதாக நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகைச் செய்தியில் உண்மை எதுவும் இல்லை என அவர் தெரிவித்தார்

மனித உரிமை மீறல் தொடர்பான குற்றங்களை செய்ததாக கூறி பதவி உயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் சில பொலிஸ் அதிகாரிகள் அதிருப்தி அடைந்துள்ளமை தெரிந்ததே.

நிவாரணத்

மூன்றுமுறைநிவாரணம் வழங்கப்படுகிறது.

மாதமொருமுறை வழங்கப்படும் நிவாரணத்தைக் கூட தொலை தூரங்களுக்குச் சென்றேபெறவேண்டியுள்ளது. பலத்த சிரமத்தின் மத்தியில் பெறும் சிறிதளவு நிவாரணத்தைக் கூட முஸ்லிம் காடையர்கள் பறித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த

பதிவுசெய்து சான்றிசழ் பெறுபவர்களுககுப்பல தகைமைகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமலும், உபத்திரவம் செய்யாமலும் வாழவேண்டும். பஞ்சசீலத்தை ஒருவர் கடைப்பிடிப்பது சுலபமானது பஞ்சசீலத்தை அனுஷ்டித்துச் சமாதானமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

குவேக்கர்ஸ்

வருவதாவது விடுதலைப்புலிகளுடன் தனது பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்உதவியுடன் கொழும்பு திரும்பினர். (75)

பல்கலை.

ணக் கிளையின் பெயரால் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட வெளியீடு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதையடுத்து பேரவை மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## ஊழியருக்கு சம்பளம்

லங்காசீமெந்து லிமிட்டெட் ஊழியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் நாளை வெள்ளிக்கிழமை (14-02-92) முதல் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில்வைத்து வழங்கப்படவுள்ளது.

சம்பளம் எடுக்க வரும் ஊழியர்கள் தமது அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர்ப்பாட்டக்

பாகிஸ்தான் ஜம்மு காஷ்மீர் தலைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பேரணி இந்திய ஜம்மு - காஷ்மீர் எல்லையை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்றும் இதில் சுமார் 20,000 தொண்டர்கள் இடம்பெற்றுள்ளனர் என்றும் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் தரப்பில் சொல்லப்படுகிறது.

மட்டு. வில்

வெள்ளையர் ஆகிய நால்வருமே இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர் அங்குள்ள 25 வீடுகள் தீயிடப்பட்டன பலரது உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த சுற்றிவளைப்பு இரண்டு நாட்களாக தொடர்ந்து நடைபெற்றது.

மன்னார்த்

தொழில் செய்ய படகுகள், வலைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கொண்டச்சி பிரதேசத்தைஅநுராதபுரத்துடன் இணைக்கும் முயற்சிகளைசிறிலங்கா அரசு செய்துவருகிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது